நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 194 /2023

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பொன்னுசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரப்பன் |
| கிராமம் | : | கந்தனூர், விருதாசம்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 09–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.56 PM

1. சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் இடம் என்னுடைய பட்டா நிலம் என்றால் சரிதான். நான் பிரச்சனைக்குரிய தடம் என்று சொல்வது கந்தனூரிலிருந்து முனியப்பன் கோவில் வரை உள்ள தடத்தைதான் குறிப்பிடுகிறேன். அது எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது.

2. என் தாத்தா அந்த நிலத்தை விலைக்கு வாங்கியபோதிலிருந்தே அந்த தடம் உள்ளது. அந்த தடத்திற்கு வடக்கு புறமாக ஆஜர் எதிரி தேவகியின் காடு உள்ளதென்றால் சரிதான். தடத்திற்கு தெற்குப்புறம் உள்ளது என்னுடைய காடு என்றால் சரியல்ல. தடமும் என்னுடைய நிலமும் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது.

3. என்னுடைய விவசாய நிலத்திற்கும் தடத்திற்கும் இடையே சுமார் 3 அடி உயரமுள்ள கரை(தடுப்பு) உள்ளது. சில இடங்களில் சமநிலமாக உள்ளது. நான் மேற்படி தடத்தை எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும், அந்த தடம் கந்தனூரிலிருந்து முனியப்பன் கோவில் வரை செல்லும் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் பொதுவான பாதை என்றாலும் எனது தாத்தா வாங்குவதற்கு முன்பாக இருந்தே அது பொதுவான தடம் தான் என்றாலும் சரியல்ல.

4. மேற்படி தடம் எனக்கு பாத்தியப்பட்டது என்று காட்ட நான் எந்த ஆவணங்களையும் இந்த வழக்கிற்கு பின்னிட்டு ஒப்படைக்கவில்லை. எதிரிகளுக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் தடம் சம்மந்தமாக நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரிகள் தான் நிலம் சம்மந்தமாக எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

5. அந்த வழக்கில் நான் உள்ளிட்ட அன்புமணி, பொன்னுசாமி, கல்யாணி, இன்பராணி ஆகியோர் இணைத்து தங்கவேல் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சொன்ன என்னுடைய தடத்தை அவர்களுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நாங்கள் சொல்லும் அந்த தடமானது எங்களுடையதாக இருந்திருந்தால் நான்தான் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அதை என்னுடைய தடம் இல்லையென்பதால் தான் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. கரும்புகாட்டை சுற்றி மரங்களை வெட்ட அவர்கள் வந்தபோது பிரச்சனை ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை. நான் கரும்புகாட்டுக்கு தண்ணீர் பாய்ச்ச செல்லும்போது எனக்கு பாத்தியப்பட்ட தடத்தில் எதிரிகள் மரங்களை வெட்டியதால் நான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது

மரங்களை வெட்டக்கூடாது என்று சொன்னதால்தான் பிரச்சனை ஏற்பட்டது.

7. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் நான்தான் எதிரிகளுக்கு சொந்தமான நிலத்தில் உள்ள மரங்களை வெட்டிவிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி தடம் பொதுவான இட்டேரி என்றாலும் அந்த தடத்திற்கு வடக்குப்புறம் ஆஜர் எதிரிகளும், இட்டேரிக்கு தெற்குப்புறம் நானும் விவசாயம் செய்கிறோம் என்றாலும் சரியல்ல.

8. நான்தான் உண்மையில் மரங்களை வெட்டினேன் என்றாலும், அதைதடுக்க வந்த தேவகி மற்றும் அவரது வயதான கணவரை நான் தாக்கி விட்டு கத்தியால் வெட்டிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் தான் எங்களை தாக்கியதாக பொய்யான புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

9. நான் சொன்னவாறு பிரகாஷ் எங்களை தாக்கவில்லை என்றாலும், நான் எதிரிகளை தாக்கி கொண்டிருந்ததை தடுப்பதற்காக மேற்படி பிரகாஷ் சம்பவயிடத்திற்கு வந்தார் என்றாலும் சரியல்ல. 2 ம் எதிரி செங்கோடன் சம்பவயிடத்தில் இல்லையென்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

10. எனக்கு சம்பவத்தின்போது இரத்தகாயம் ஏற்படவில்லை எனது கையில் 20 செ.மீ அளவில் கன்றியகாயம் ஏற்பட்டிருந்தது. ராஜேந்திரன் என்பவர் எனது தூரத்து உறவினர். நான் மருத்துவமனைக்கு காலை 10.30 மணிக்கு சென்றேன். மருத்துவமனைக்கு செல்லும் முன்பாக காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை.

11. 25.06.2021 ம் தேதி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 27.06.2021 ம் தேதி சிகிச்சை முடிந்து வீடுதிரும்பினேன். சம்பவதன்று மதியம் 02.00 மணிக்கு போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தனர். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

12. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான்தான் எதிரிகளை தாக்கிவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி எதிரிகள் என்னை தாக்கியதாக பொய்புகார் அளித்து பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும்

சம்மந்தமில்லை என்றாலும், நான் வேண்டுமென்றே கொடுத்த பொய் வழக்கு என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-01.25 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**